1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) 1-10-70-க்கு முன்னர், ஆனால் 1-6-70-க்கு பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் 1-10-70—க்குப்பின் ஓய்வுபெற்ற ஆசிரியர்களைப் போல தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இவ்விதிகளின்படி ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்களைப் போலவே உயர்ந்த அளவு 33/80 என்ற விகிதத்தில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

1-6-70-க்கு முன் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பணிக்காலம் மற்றும் ஓய்வு பெறுவதற்குமுன் பெற்ற கடைசி 12 மாதங்களில் சராசரி ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில் உயர்ந்த அளவு 30/120 என்ற விகிதத்தில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

1-10-70-க்கு முன் ஆனால் 1-6-70-க்குப்பின் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பணிக்கொடையும், குடும்ப ஓய்வூதியமும் உண்டு. 1-6-70-க்கு முன்-ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தனது வருங்கால வைப்பு - நிதியின் இருப்பில் உள்ள தொகையில் 1/3 பாகம் அரசு பங்குத்தொகையாகவும் ஆயுள் காப்பீட்டு - நிதியில் - முதலீடு செய்திருந்தால் - அத்தொகையும், ஓய்வுபெறும்போது பெறு கிறார்கள். சில விதிகளுக்குட்பட்டு குடும்ப ஓய்வூதியமும் பெற முடியும்.

[முற்பகல் 10-20]

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் என்ன தொகை அளிக்கப் படுகிறது? அந்த குறைந்தபட்ச தொகையை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? அடுத்து, சென்னையிலே உள்ளவர்கள் நேரிலே அந்தப் பணத்தைப் பெறுவது போல், இதர பகுதியிலே உள்ளவர்களும் பெறுவதற்கான சூழ்நிலையை உண்டாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு இந்த அரசு 33/80 என்கிற வகையிலே ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

வடசென்னைப் பகுதியில் பாலங்களை அகலப்படுத்தல்

* வினா எண் 204—திரு.சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட் சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) சென்னையில் உள்ள கான்ஸ்ரோட் பாலம் (வியாசர் பாடி) ஓட்டேரி பாலம் ஆகிய இரண்டையும் உலக வங்கி மூலம் கடன் பெற்று அகலப்படுத்த திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அவ்வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ&ஆ) உலக வங்கி கடன் திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையினரால் கான் ஸ்ரோடு பாலம் (வியாசர்பாடி) அகலப்படுத்த வேலை துவக்கப்பட்டுள்ளது. சென்னைமாநகராட்சி தன் நிதியைக் கொண்டு ஓட்டேரி பாலத்தை அகலப்படுத்தும் பூர்வாங்க வேலையைத் துவக்கியுள்ளது.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, சென்னையிலே இப்படி பட்ட பாலங்கள் கட்டப்பட்டு நீண்டகாலமாக இருக்கின்ற காரணத்தால், எப்போது இடிந்து விழுமோ என்ற நிலையில் உள்ள பாலங்களை மீண்டும் கட்டுவதற்கான வேலையை இந்த அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே குறிப்பிட்ட இந்த இரண்டு பாலங்களைப் பற்றிய கேள்விக்கு பதில் அறிவித்திருக்கிறேன். மற்றப் பாலங்களைப் பற்றி தனியாக கேள்வி கேட்டால், தகவல் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு தொகுதியாக இருந்தாலும், திரு அரங்கநாதனுக்கு அனுமதி அளிக்கிறேன். திரு. மு, அரங்கநாதன்,

திரு சென்னை மு, அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியையொட்டியே, லாயிட்ஸ் சாலை பாலத்தையும், அதே போல் பீட்டர்ஸ் ரோடு பாலத்தையும் செம்மைப்படுத்துவதற்கு, போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமாக இருக்கின்ற காரணத்தால், இவைகளையும் அகலப்படுத்துவதற்கு உலக வங்கியிடமிருந்து உதவிபெற்று அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த இரண்டு பாலங்களுக்கு திரு. பாலன் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டது போல, இவைகளைப் பற்றி தனியாக கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

Staff of Local Bodies

* Q.No.205—Thiru K. SUPPU: will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that the Government orders No.410/R.D & L.A., dated 28-2-73 No.106/P.W.D., dated 22-1-77 and 294. P.W.D., dated 22-2-77 are not yet implemented by the Department and

(b) If so the reason therefor ?